# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் : 10 | தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II<br>Communication and Media Studies II | நேரம் :<br>2 மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 87 T II | மேலதிக வாசிப்பு நேரம்<br>10 நிமிடம் |

- ❖ முதலாம் வினாவையும் வேறு எவையேனும் நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனை எல்லா வினாக்களுக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

01. தொடர்பாடல் ஓர் செயன்முறையாகும்.

1. தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.
2. ஆளிடைத் தொடர்பாடலுக்கான உதாரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. மின்னஞ்சலின் சிறப்பியல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. அலுவலகத்தில் இணையத்தளமொன்றை (Website) உபயோகிப்பதனால் எட்டப்படும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. கணினிசார் வெளியீட்டுச் செயல் ஒழுங்கைப் பூர்த்தி செய்யக்கூடியதாகப் பயன்படும் கருவிகள் நான்கினைக் குறிப்பிடுக.
6. எறிவை ஊடக உபகரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
7. முறைசார் தொடர்பாடல் செயற்படுகின்ற முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
8. காந்தப் பலகையின் பயன்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. வானொலி நிறுவனமொன்றில் பணியாற்றும் பணியாளர்கள் இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.
10. இலங்கையில் முதன்முதலில் வெளியிடப்பட்ட பத்திரிகையின் பெயர்?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02.
1. தொலைபேசித் தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட மாதிரியின் பெயரைக் குறிப்பிடுக. ( 1 புள்ளி )
2. A → B → C → D → E

   மேலே வரையப்பட்ட லாஸ்வெல் மாதிரியில் குறிப்பிடப்பட்ட ஆங்கில எழுத்துக்களுக்குப் பொருத்தமான பெயரினைக் குறிப்பிடுக. ( 2 புள்ளிகள்)
3. பேராசிரியர் ஹெரோல்ட் டீ லாஸ்வெல்லினால் தொடர்பாடல் பற்றி முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)
4. தொலைபேசியின் பயன்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக. ( 4 புள்ளிகள்)

03\. 1. புலக்காட்சி என்றால் என்ன? ( 1 புள்ளி)

2. இருவரிடை அல்லது சோடித் தொடர்பாடலுக்கான உதாரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. ( 2 புள்ளிகள்)
3. ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)
4. முறைசாராத் தொடர்பாடல் சங்கலிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக. ( 4 புள்ளிகள்)

04\. 1. ஆளுள் தொடர்பாடல் என்றால் என்ன? ( 1 புள்ளி)

2. பல்லூடக எறிவையின் (Multimedia projector) பயன்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. ( 2 புள்ளிகள்)
3. வாயிற்காப்போன் பணியினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)
4. வானொலி ஊடகத்தைப் பயன்படுத்தவதன் மூலம் நீர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக. ( 4 புள்ளிகள்)

05\. 1. மரபு ரீதியான, நவீன ரீதியான கட்புல ஊடகங்கள் நான்கினைக் குறிப்பிடுக.( 1 புள்ளி)

2. அச்சிடல் இயந்திர வழிமுறைகள் இரண்டின் பெயர் தருக. ( 2 புள்ளிகள்)
3. குழுத் தொடர்பாடலின் சிறப்பியல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)
4. வகுப்பறை உபகரணமான கரும்பலகையினை அமைக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக. ( 4 புள்ளிகள்)

06\. 1. தொடர்பாடல் வடிவங்கள் நான்கின் பெயரினைக் குறிப்பிடுக. ( 1 புள்ளி)

2. தற்போது பாவனையிலுள்ள தொலைபேசியின் இரு பிரதான வகைகளினைக் குறிப்பிடுக. ( 2 புள்ளிகள்)
3. பத்திரிகை நிறுவன ஆசிரியர் பீடத்தில் பிரதம ஆசிரியர் தலைமையின் கீழ் பணியாற்றும் பணியாளர்களை ஒழுங்கு முறைப்படுத்தி எழுதுக. ( 3 புள்ளிகள்)
4. முகநூல் பாவனையால் (Facebook) மாணவர் சமூகம் தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றது என்பதை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? அதற்கான காரணம் இரண்டினைக் குறிப்பிடுக. ( 4 புள்ளிகள்)

07\. 1. உமது பாடசாலையில் தகவல் வழங்குவதற்குப் பயன்படும் ஊடக உபகரணங்கள் இரண்டு தருக. ( 1 புள்ளி)

2. கலங்கரை விளக்க உபாய முறை என்றால் என்ன? ( 2 புள்ளிகள்)
3. வினைத்திறன் மிக்க வகையில் உரையாற்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு சிறுவிளக்கம் தருக. ( 3 புள்ளிகள்)
4. அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் முத்திரைக் கருவிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. ( 4 புள்ளிகள்)